AIDS InfoNet

www.aidsinfonet.org

Fact Sheet Number 501

# கேண்டிடயாஸிஸ் (பூஞ்சை தொற்றுக்கள்)

# Candidiasis

**கேண்டிடயாஸிஸ் (பூஞ்சை தொற்றுக்கள்) என்றால் என்ன?**

கேண்டிடயாஸிஸ் HIV தொற்று உள்ளோரிடம் மிக சாதாரணமாக காணப்படக்கூடிய ஓர் தொற்று ஆகும். இத் தொற்று புஞ்சை (அல்லது புங்குஸ்) மூலமாக உருவாகப்படும் ஓர் தொற்று ஆகும் இதனை கேண்டிடா என அழைப்பர். இப் புஞ்சை பெரும்பாலும் அனைவரது உடலிலும் காணப்படக்கூடியது. ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு நிலை இருப்பின் இதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவும் . கேண்டிடாபொதுவாக வாய் தொண்டை அல்லது பெண்ணின் பிறப்புறுப்பை பாதிக்கும் , இத்தொற்று மற்ற சந்தர்ப்பவாத நோய்கள் தாக்குவதற்கு முன்பு சில மாதங்களோ அல்லது வருடங்களுக்கு முன்போ வரக்கூடும் . மேலும் சந்தர்ப்ப வியாதிகளை பற்றி அறிந்துகொள்ள Fact sheet 500ஐ பார்க்கவும்.

இத்தொற்று வாயினுள் ஏற்பட்டால் அதனை த்ரஷ் (thrush) என அழைப்பர் . அத்தொற்றை தொண்டையின் உட்புறத்தில் ஏற்பட்டால் அதனை ஈஸொஃபஜைடீஸ்(**esophagitis**) என அழைப்பர். இத் தொற்று ஏற்படுமானால் அவை வெள்ளை நிற தடயங்கள் காணப்படும் . சில சமயம் அவை சிவப்பு புள்ளிகளை உண்டாக்கும்.
இதனால் தொண்டையில் வலி ஏற்படுவதன் மூலம் உணவை விழுங்கும்போது வலியும் , வாந்தி வருவது போன்று எண்ணமும் , பசியின்மையும் ஏற்படக்கூடும் . Thrush ( த்ரஷ் ) னால் வாயின் விளிம்பிகளிலில் வெடிப்பு போன்று காணப்படும் . அதனை அங்குலர் செலிடிஸ் ( angular chelitis ) என அழைப்பர் .

இத்தொற்று பெண்ணின் பிறப்புறுப்பில் ஏற்பட்டால் அதனை ஈஸ்ட் இன்பெக்ஷன் (yeast infection) அல்லது வெஜனைடீஸ் (vaginities) என அழைப்பர். இது ஓர் சாதாரணமான பெண் பிறப்புறுப்பு தொற்று நோய் ஆகும் இதனுடைய அறிகுறியாக அரிப்பு , எரிச்சல் மற்றும் கெட்டியான வெள்ளை திரவம் வெளியேருவதாகும்.

இக் கேண்டிடா மூளை , இதயம் , மூட்டுகள் மற்றும் கண்ணில் தொற்றுகள் பரப்பவும் செய்யும்.

**இதனை கட்டுபடுத்த முடியுமா ?**

கேண்டிடாவிடமிருந்து , தப்ப வாய்ப்பில்லை . பொதுவாக இந்நோய் தொற்று வராமல் தடுக்க, மருந்துகள் உபயோகிக்கப் படுவதில்லை . அதற்கு பல காரணங்கள் உள்ளன.

1 ) அவை அவ்வளவு ஆபத்தற்றவை .
2 ) அதனை கட்டுப்படுத்த சரியான மருந்துகள் உள்ளன.
3 ) அப் பூஞ்சைகள் மருந்திற்கு எதிர்திறன் உண்டாகக்கூடும்.

ஆகவே உடம்பின் நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துவதன் மூலமும் ART சிகிச்சையை எடுப்பதில் மூலமும் இவ்வகை கேண்டிடயாஸிஸை முறியடிக்க முடியும்.

**கேண்டிடயாஸிஸ் எவ்வாறு குணப்டுதுகின்றனர்?**

ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு மண்டலம் கேண்டிடயாஸிஸை சம நிலையில் வைத்திருக்க உதவுகிறது. கேண்டிடயாஸிஸ்க்கான சிகிச்சை எடுப்பதன் மூலம் அதற்கு காரணமான புஞ்சை அறவே நீக்கி விட முடியாது, ஆனால் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க இயலும்.

இதற்காக சிகிச்சையை பாதிக்கப்பட்டுள்ள இடத்திலேயோ அல்லது முழுமையான சிகிச்சையையோ எடுத்துக் கொள்ளலாம். பாதிக்கப்பட்ட இடத்தில் மருந்தை போடுவதின் மூலம் சிகிச்சையளிப்பது. முழுமையான சிகிச்சையை என்பது முழு உடம்பையே பாதிக்கும் பெரும்பாலும் மருத்துவர்கள் பாதிக்கப்பட்ட இடத்தில் மருந்தினை போடுவார்கள், இம்முறையில் முழுமையான சிகிச்சையை காட்டிலும் குறைவாக காணப்படும் மட்டுமல்லாமல் இதன் மூலம் கேண்டிடயாஸிஸ் க்கு காரணமான புஞ்சை மருந்துகளுக்கு எதிர்திறன் பெறமால் இருக்கும்.

கேண்டிடயாஸிஸ்க்கு காரணமான மருந்துகள் புஞ்சைக்கு எதிராக செயல்பட கூடியவையாகும். அதற்காக பயன்படுத்தப்படும் மருந்துகள் அசொல் (azole) என்ற

ஒலியுடன் முடியும். இம் மருந்துகளில் clotrimazole, nystatin, fluconazole, and itraconazole.

ஆகியவை ஆகும்.

- பாதிக்கப்பட்ட இடத்தில் சிகிச்சைக்காக
  - களிம்புகள்
  - பெண்கள் பிறப்புறுப்பு சிகிச்சை அளிப்பதற்கு மெழுகு போன்று உருகும் தன்மையுடைய மருந்துகள்
  - திரவநிலை
  - தொண்டைக்கு இதம் தரக்கூடிய அல்லது எளிதாக விழுங்க கூடிய நிலையில் உள்ள மருந்துகள்

இவ்வாறு அளிக்கப்படும். சிகிச்சையில் வலியோ அல்லது அரிப்பு ஏற்படும்.

- முழுமையான சிகிச்சை பாதிக்கப்பட்ட இடத்தில் சிகிச்சை பலனளிக்காமல் போகும் பொழுதோ அல்லது தேவைப்படும் பொழுது அல்லது தொற்று தொண்டையிலிருந்து உணவு குல்லைக்கு கிளாகவோ அல்லது மற்ற பகுதிக்கு பரவும் பொழுது எடுக்கப்படும். சில முழுமையான சிகிச்சைக்கு மாத்திரை வடிவில் மருந்துகள்உள்ளன அவ்வாறு எடுக்கப்படும் மருந்தின் முலம் வாந்தி வருவது போன்று உணர்வு, வாந்தி மற்றும் அடிவைற்று வலி, இம் மருந்துகளை எடுக்கும் 20 % மக்களுக்கு இவ் பக்க விளைவுகள் காணப்படும்.

கேண்டிடயாஸிஸ் சிகிச்சைக்கு பிறகும் வந்தால், சில மருத்துவர்கள் புஞ்சைகளை கட்டுப்படுத்தக் கூடிய மருந்துகளை நீண்ட காலம் உபயோகிக்க சிபாரிசு செய்வார்கள், இதன் முலம் அம் மருந்துகள் அப்புஞ்சைக்கு எதிரான திறனை பெற்றுவிடும். அதனால் அப்புஞ்சைகள் மாறுதலடைந்து அம்மருந்திற்கான எதிர்திரன் பெற்றுவிடும்.சில விசயங்களில் சிகிச்சைக்கான பலனை காணமுடியாது, அம்மாதிரியான சமயங்களில் அம்போட்டெரிசின் B (amphotericin B ) யை பயன்படுத்தலாம், இம் மருந்தானது அதிக வலிமைஉடையது மற்றும் விஷ தன்மையுடையது, இதன் முலம் சிறுநீரக பிரச்சனை மற்றும் ரத்தசோகை மற்றும் பிற விளைவுகளாக காய்ச்சல், குளிர்சுரம், வாந்தி வருவது போன்று உணர்வு, வாந்தி மற்றும் தலைவலி இவ்வகை பிரச்சனைகள் ஒரு சில முறை மருந்துகள் உண்ணும்போழுதே சரியாகி விடும்.

**இயற்கை வைத்தியங்கள் :**
மருந்தில்லாத சில முறைகள் இதனை குறைக்கிறது இதனை பற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை.

- உணவில் சர்க்கரை குறைக்க வேண்டும்.
- Paud'Aro தேநநீர் குடிப்பதன்முலம், இத்தேனீர் தென் அமெரிக்காவில் காணப்படும் ஒரு வகை மரப்பட்டையில் தயாரிக்கப்படுகிறது .
- பூண்டை உணவில் சேர்த்து கொள்வது அல்லது பச்சையாக உண்பது . பூண்டு புஞ்சை மற்றும் பாக்டீரியா எதிராக வேலை செய்யும் . ஆனால் ART ல் உள்ள ப்ரோடசே இன்ஹெபடாஸ் protease inhibitor ஒரு சிறந்த க்கு எதிராக செயல்படக்கூடும் .
- தேயிலை மர எண்ணெயை தண்ணீரில் கலக்கி வாய் கொப்பளிக்கவும் .
- லக்டோபசிலஸ் அஜிடோபிலஸ் மாத்திரை அல்லது தயிரில் காணப்படும் லக்டோபசிலஸ் உட்கொள்ளவும். அவ்வாறு தயிர் வாங்கும்பொழுது லக்டோபசிலஸ் உள்ளதா என உறுதி செய்யவும் . இதனை மருந்து எடுத்துகொண்டபின் சாப்பிடுவது சிறந்தது .
- மற்றும் கமொளினிக் அசிட் gamma-linoleic acid (GLA) மற்றும் பயொடின்(Biotin) உட்கொள்ளலாம். இம்மருந்துகள் கேண்டிடா பரவுவதை குறைக்கும் . கமொளினிக் அசிட் இவை குளிரூட்டப்பட்ட எண்ணையில் கிடைக்கும். ப்யொட்டின் ஒரு வைட்டமின் B ஆகும்.

**முடிவுரை :**

கேண்டிடயாசிஸ் ஒரு சாதாரண புஞ்சை தொற்று ஆகும். இப்புஞ்சை எல்லோர் உடம்பிலும் வாழக்கூடியவை .இதனை முழுமையாக குணப்படுத்த முடியாது. ஆகவே நமது நோய் எதர்ப்பு மண்டலத்தை சிறப்பாக வைத்திருப்பது சிறந்த முறையாகும் மட்டுமன்றி ARV சிகிச்சை எடுப்பதினாலும் இப்பிரச்சனை தவிர்க்கலாம் .

பொதுவாக கேண்டிடயாசிஸ் தொற்றை எளிதாக குணப்படுத்தலாம் . மிக மோசமான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கு இத்தொற்று தொடர் பிரச்சனையாகிவிடும் . முறையாக புஞ்சைக்கு எதிரான மருந்தை எடுத்துகொள்ளலாம் . அதனை கேண்டிடா நோய் எதிர்ப்பு அடைந்துவிடும். வலிமையான மருந்தாக அம்போட்டெரிசின் B பயன்படும் . ஆனால் அதில் அதிக பக்க விளைவுகள் உண்டு. ஆனால் இயற்கை மருத்துவம் கேண்டிடயாசிஸ் கட்டுப்படுத்த உதவிஉள்ளது.

***Revised May 25, 2010***